**தலவாக்கலை – லிந்துல நகர சபை**

**நுவரெலியா மாவட்டம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 பெப்ரவரி 28 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 பெப்ரவரி 29 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஜூலை 25 ஆந் திகதி செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து தலவாக்கலை – லிந்துல நகர சபையின் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

(அ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் ‘‘ஈ-நெனசல’’ பாடநெறிக் கட்டணங்களாக சபைக்கு கிடைத்த ரூபா 40,550 தொகை உரிய ஆண்டுகளில் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் மீளச்செலுத்த வேண்டிய வைப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் இறுதியில் திரண்ட நிதியக் கணக்கின் மீதி அப்பெறுமதியால் குறைத்தும் வைப்பு கணக்கின் மீதி அப்பெறுமதியால் அதிகரித்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டில் அறிவிடப்பட்டிருந்த களியாட்ட வரி ரூபா 28,500 வருமானத்திற்குச் செலவு வைக்கப்படாமல் வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் வருமானம் ரூபா ரூபா 28,500

குறைத்தும் மீளாய்வாண்டின் இறுதியில் வைப்புக் கணக்கின் மீதி ரூபா 28,500 ஆல் கூடுதலாகவும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

### 1.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டு முதல் 09 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்த செலுத்த வேண்டியிருந்த 06 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,231,906 ஆன கொடுப்பனவு தீர்வுசெய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 80,323 தொகையான 04 சொத்து விடயங்களின் எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| i. 189 மற்றும் 486 | 2002 திசெம்பர் முதல் 2016 செப்தம்பருக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் சபைக்கு கிடைத்து மதிப்பிழந்த ரூபா 446,178 பெறுமதியான 04 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் மற்றும் ஊழியர் சேமலாப நிதி முகாமைத்துவ சபையின் தலைவரின் 2010 மே 25 ஆந் திகதிய 4/2010 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் நாளாந்த கொடுப்பனவு அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த இரண்டு சுகாதார தொழிலாளர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 489,600 ஆன படிகளுக்காக சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செலுத்தப்பட வேண்டிய ரூபா 97,920 ஆன பங்களிப்புத் தொகையை அரச சேவை சேமலாப நிதியத்திற்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 1988 மே 17 ஆந் திகதிய 1988/22 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | வீதவரிக்காக ஆதனங்கள் 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை குத்தகை திருத்தப்பட வேண்டிய போதிலும், சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதவரி ஆதனங்கள் 2011 ஆம் ஆண்டின் பின்னர் அவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2016 மார்ச் 17 ஆந் திகதிய மப/உ.மா.ஆ/2016/03 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | கடை வாடகை 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், சபைக்குச் சொந்தமான 32 கடைகளுக்காக 2007 ஆம் ஆண்டின் பின்னர் வாடகை திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 நிதி விளைவுகள்

------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,486,670 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 6,486,183 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 3,000,287 தொகையான முன்னேற்றமொன்று காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

------------------------------------------------------

நிதி விளைவுகளில் ரூபா 3,000,287 இற்கான முன்னேற்றத்திற்கு ஒரு வருமான விடயத்தில் அதிகரிப்பும் 03 செலவின விடயங்களில் குறைவும் 3 வருமான விடயங்களில் குறைவும் ஒரு செலவின விடயத்தில் அதிகரிப்பும் உட்பட ஏனைய வருமானச் செலவின விடயங்களின் வேறுபாடுகளும் தாக்கமளித்திருந்தன.

### 2.3 வருமான நிருவாகம்

-----------------------------------

#### 2.3.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

--------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 252,048 ஆன நிலுவை வீட்டு வாடகையிலிருந்து எவ்வித தொகையும் அறவிடப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அறவிடப்படாதிருந்த மொத்த வீட்டு வாடகை மற்றும் வரி அளவு ரூபா 417,658 ஆக இருந்தது.

**2.3.2 வீத வரி**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,627,592 ஆன வீதவரி அறவீடு செய்யப்பட வேண்டிய போதிலும், அத்தொகையை அறவிடுவதற்காக நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 170 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், இத்தொகையில் ரூபா 1,632,028 தொகை ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்டது.

**2.3.3 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 171,826 தொகையும் காணி பரிமாற்றல் முத்திரைக் கட்டணங்களாக ரூபா 81,500 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவத் திறமையின்மை**

(அ) சபையின் பொது வியாபாரச் சந்தையின் 21 கடைகளுக்குரிய வாடகை உடன்படிக்கைகளின் செல்லுபடிக் காலம் முடிவடைந்திருந்த போதிலும் புதிய உடன்படிக்கைகளை கைச்சாத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 யூன் மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்த மாடுகளை அறுக்குமிடத்திற்கு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் மீளாய்வண்டின் திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக் கூற்றில் தீர்வுசெய்யப்படாத பெறுவனவுகளாக 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் இருந்து முன்கொண்டு வரப்பட்டு வரும் ரூபா 410,726 ஆன மீதி தீர்வுசெய்யப்பட்டிருக்கவில்லை.

**3.2 செயற்பாட்டு திறமையின்மை**

2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் ரூபா 901,900 செலவு செய்து ஆரம்பிக்கப்பட்டிருந்த கொத்மல ஓயா மற்றும் நீர்த்தேக்கத்தை அண்மித்த படகு சேவை செயற்திட்டம் மீளாய்வாண்டின் போது செயற்படுத்தி வருமானத்தை உழைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 விளைவற்ற / குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

---

சபைக்குச் சொந்தமான ரூபா 6,180,000 கிரயமான மைக்ரோ வகை கெப் வண்டி பாவனைக்கு பொருத்தமற்றதாக இருப்பதால் 2012 ஆம் ஆண்டின் போது ஏலத்தில் விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் ஏலவிற்பனை செய்யப்படாமல் சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**3.4 ஒப்பந்த நிர்வாகம்**

---

சபையின் திண்மக்கழிவு முாமைத்துவ நிலையத்திற்கு செல்வதற்கு நிர்மாணிக்கப்பட்டிருந்த மாற்றுவழிக்காக ரூபா 1,689,353 செலுத்தி வீதிக்கு இடப்பட்டிருந்த கொங்கிரீட் கலவை மிகவும் பலவீனமான நிலைமையில் காணப்பட்டது. அவ்வாறே வீதிக்கு இடப்படாத 3.15 கனமீற்றர் கொங்கிரீட்டிற்கு ரூபா 42,320 கூடுதலான கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**3.5 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை பராமரித்துச் செல்லும் திண்மக்கழிவுப் பொருள் நிலையத்திற்கு எடுத்து வரப்படும் சபை பிரதேசத்தின் கழிவுப்பொருட்கள் வகைப்படுத்தப்படாமல் மண் இடப்பட்டு மூடப்பட்டு வருவதுடன் நிலையத்தின் நடவடிக்கைகளை பேணிச்செல்வதற்காக போதியளவில் தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தின் மக்களுக்கு கழிவுப்பொருள் முகாமைத்துவ செயற்பாடுகளுக்காக பகிர்ந்தளிப்பதற்காக மீளாய்வாண்டின் செப்தெம்பர் மாதம் ரூபா 189,727 செலவு செய்து 100 பிளாஸ்ரிக் கொம்போஸ்ட் தொட்டிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 102,452 பெறுமதியான 54 பிளாஸ்ரிக் தொட்டிகள் விநியோகிக்கப்படாமல் சபை வளவில் வைக்கப்பட்டிருந்தன.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் படி மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்கள், உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுடன் இணக்கஞ் செய்யும் போது 04 வருமான விடயங்களில் 09 சதவீதம் முதல் 31 சதவீதம் வரையும் 07 செலவின விடயங்களில் 09 சதவீதம் முதல் 71 சதவீதம் வரையும் விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமாக கட்டுப்பாட்டு கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) வருமான நிர்வாகம் | சபைக்கு அறவிடப்பட வேண்டிய நிலுவை வருமானங்கள் அறவிடப்படாமை. |
| (ஆ) கடன்பட்டோர்/ கடன் கொடுத்தோர் நிர்வாகம் | வெவ்வேறு தரப்பினரிடமிருந்து சபைக்கு அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கும் வெவ்வேறு தரப்பினருக்கு செலுத்த வேண்டிய தொகைகளை தீர்வு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (இ) சொத்துக்கள் கட்டுப்பாடு | கைதவிர்க்கப்பட வேண்டிய சொத்துக்களை கையகற்றி சபைக்கு வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் அச்சொத்துக்களை சபையிலே வைத்திருந்தமை. |
| (ஈ) கணக்கீடு | வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய வைப்புக்கள் கணக்கிற்கு செலவுவைத்தல் |